கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும்
மீன்வளத்துறை

# மீன்வளம்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2012-2013

## கோரிக்கை எண். 7

திரு. கே.ஏ. ஜெயபால்
மீன்வளத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு

2012

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | மீன்வளம் ஒரு கண்ணோட்டம் | 2 |
| 3 | நிர்வாக அமைப்பு | 4 |
| 4 | மீன்வளத்துறையின் நோக்கங்கள் | 5 |
| | திட்டங்கள்: | |
| 5 | கடல் மீன்வளம் | 6 |
| 6 | உள்நாட்டு மீன்வளம் | 29 |
| 7 | ஆராய்ச்சி | 34 |
| 8 | விரிவாக்கம் மற்றும் பயிற்சி | 34 |
| 9 | சிறப்புத் திட்டங்கள் | 36 |
| 10 | மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 43 |
| 11 | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் | 44 |
| 12 | பகுதி 2 திட்டங்கள் | 46 |
| 13. | 2012–13 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு | 48 |
| 14. | தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) | 48 |
| 15. | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) | 50 |
| 16. | முடிவுரை | 57 |

## மீன்வளத்துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

### 1. முன்னுரை

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் மீன்வளம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. மாநிலத்தில் பல்உயிரின மீன்வகைகள் மீன்வள மேம்பாட்டிற்கு நல்வாய்ப்பினை அளிக்கிறது. ஆரம்ப திட்ட காலங்களில் வாழ்வாதாரத் தொழிலாகத் தொடங்கிய மீன்வளமானது, தற்போது ஒரு முக்கிய தொழிலாக உருமாற்றம் பெற்று வேலை வாய்ப்பினை உருவாக்குதல், உணவு பாதுகாப்பு, மற்றும் அந்நியச் செலாவணியை ஈட்டுதல் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க பங்கினை அளிக்கிறது. தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியானது, 10 மற்றும் 11 வது ஐந்தாண்டு திட்ட காலங்களில் நிலையான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த வளர்ச்சி 12 வது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசின் முக்கிய கொள்கைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

- நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- பல்வேறு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை அளித்தல்.
- மீனவர்களின் மீன்பிடி உரிமையைப் பாதுகாத்தல்.
- மீனவர்கள் பயனடையவும், மீன்களை சுகாதாரமாகக் கையாளவும் மற்றும் பதப்படுத்தவும் அதன் மூலம் ஏற்றுமதியைப் பெருக்கவும் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்.
- சட்டப்பூர்வமான ஒழுங்கு நெறிமுறைகளை அமலாக்கம் செய்தல், மீன்வள இருப்புகளை அதிகப்படுத்துதல்,



மற்றும் செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் ஆகியவை மூலம் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல்.

- மீனவர்கள் தூரக் கடல் மீன்பிடிப்பு மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப்பினை மாற்று முறை மீன்பிடிப்பாக மேற்கொள்வதற்கு நிதி உதவி அளித்தல் மற்றும் ஆழ்கடல் மீன்பதனிடும் அலகினை அமைத்தல் ஆகியவற்றின் மூலம் மீன்வள ஆதாரங்களை மேலாண்மை செய்தல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை மேம்படுத்துதல்.

### 2. மீன்வளம் ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாட்டின் மீன்வளமானது கடல், நன்னீர் மற்றும் உவர் நீர் என மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த பரந்து விரிந்த கடல் மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் இதுகாறும் முழுமையான அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

### 2.1 கடல் மீன்வளம்

தமிழ்நாட்டின் கடல் மீன்வளமானது, 1.9 இலட்சம் சதுர கிலோ மீட்டர் தனி உரிமை பொருளாதார மண்டலத்தையும், 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்படு நிலத் தொடரையும் கொண்டுள்ளது. இவற்றில், அண்மைக்கடல் மீன்வளம் மிகுதியாக பயன்படுத்தப்பட்ட நிலையில், தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் மீன்வளமானது, பெரிதும் உகந்த அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

கடல் மீன்வளம் குறித்த விவரங்கள் கீழ்கண்ட அட்டவணை 1–இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் (2011–12) ஒரு கண்ணோட்டம்**

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி.மீ. |
| கடலோர மாவட்டங்களின் எண்ணிக்கை | 13 |
| மீனவ கிராமங்களின் எண்ணிக்கை | 591 |
| கடல் மீனவ மக்கள் தொகை | 9.15 இலட்சம் * |
| மீன்பிடி கலன்கள் | 6,728 மீன்பிடி விசைப்படகுகள், 56,792 பாரம்பரிய மீன்பிடி கலன்கள் (இயந்திரம் பொருத்தப்பட்டது மற்றும் பொருத்தப்படாதது). |
| பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் | 3 |
| நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் | 3 |
| மீன்பிடி படகு அணையும் இடங்கள் | 10 |
| மீன் இறங்கு தளங்கள் | 363 |
| கடல் மீன் உற்பத்தி (2011-12) | 4.25 இலட்சம் டன்கள் |
| ஏற்றுமதி (2011-12) | 73,991 டன்கள் ** (மதிப்பு ரூ.2,800.81 கோடி ) |

* 2012 ஆம் ஆண்டிற்கான உத்தேச மக்கள் தொகை (இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011)

** உத்தேச மதிப்பு

## 2.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வளமானது, நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய நீண்ட கால நீர்ப்பாசன குளங்கள், நீண்ட மற்றும் குறுகிய கால நீர்ப்பிடிப்பு கொண்ட பருவகால குளங்கள் மற்றும் குட்டைகள் ஆகியவைகளை



உள்ளடக்கியுள்ளது. இவைகள் மீன் வளர்ப்பிற்கும் மீன்பிடிப்பிற்கும் ஏற்றவைகளாக உள்ளன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை–2இல், உள்நாட்டு மீன்வளம் குறித்தான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: உள்நாட்டு மீன்வளம் – ஒரு கண்ணோட்டம்**

| | |
|---|---|
| நன்னீர் மீன்வள ஆதாரங்கள் | 3.73 இலட்சம் ஹெக்டேர் |
| நீர்தேக்கங்கள் | 52,055 ஹெக்டேர் |
| பெரிய நீர்பாசன ஏரிகள் மற்றும் பருவ கால குளங்கள் | 2,65,641 ஹெக்டேர் |
| உவர் நீர் பரப்பு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கள் தொகை | 2.23 இலட்சம் |
| மீன் உற்பத்தி (2011-12) | 1.72 இலட்சம் டன்கள், |

## 2.3 உவர்நீர் மீன்வளம்

உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேற்கொள்வதற்கு உகந்த வகையில், 56,000 ஹெக்டேர் உவர்நீர்ப் பகுதிகள் உள்ளன. 6019.21 ஹெக்டேர் பரப்பில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, ரூ.451 கோடி மதிப்பிலான 15,050 டன் இறால்கள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகின்றன. சென்னையைத் தவிர்த்து, அனைத்து கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கி ஐந்து உவர்நீர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன.

## 3. நிர்வாக அமைப்பு

மீன்வளத்துறையின் இயக்குநர், துறையின் தலைவராகவும், தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு

மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உட்பட அனைத்து மீனவர் கூட்டுறவு சங்கங்களின் செயற்பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

மீன்வளத்துறையானது, **6** மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 3 மீன்துறை மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் 3 மீன்துறை மண்டல துணை இயக்குநர்களின் தலைமையில், 52 மீன்துறை உதவி இயக்குநர்களின் பணிகளை மேற்பார்வையிட்டு, மீனவர் நலத் திட்டங்கள் உள்பட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இத்துடன் முதன்மைப் பொறியாளர் தலைமையில் ஒரு பொறியியல் பிரிவும் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

## 4. மீன்வளத்துறையின் நோக்கங்கள்

மீன்வளத்துறையின் நோக்கங்கள் பின்வருமாறு.

- மாநிலத்தில் உள்ள மீன் வளங்களைப் பாதுகாத்து, மீன்வள ஆதாரங்களை மேலாண்மை செய்து வளங்குன்றா மீன் உற்பத்தியினை அடைதல்.
- பயன்படுத்தப்படாமல் இருக்கும் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்திடவும், அண்மைக் கடல் பகுதிகளில் அளவிற்கதிகமான மீன்பிடிப்பினைக் குறைத்திடவும் மீனவர்களை ஊக்குவித்தல்.
- மீன்களைக் கரை இறக்குவதற்கும், பதப்படுத்துவதற்கும், மீன்பதப்படுத்தல் மற்றும் விற்பனைக்கான வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.
- மீனவ மக்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.



- சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலைத்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
- மீன்வளம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களில் நேரடி / பன்முக வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
- ஏற்றுமதி அபிவிருத்தி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.

### திட்டங்கள்

நிலைத்த மீன்வள ஆதாரங்களைப் பாதுகாப்பதுடன் உற்பத்தியைப் பெருக்குதல் மற்றும் அதன் மூலம் மீனவர்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துதல் ஆகியவைகள் மீன்வளத்துறையின் முக்கிய நோக்கங்களாகும். மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைய பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 5. கடல் மீன்வளம்

### அ) நலத்திட்டங்கள்

இந்த அரசு, மீனவர்களின் நலனுக்கு எப்பொழுதுமே முன்னுரிமை அளித்து வருகிறது. பல்வேறு நலத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

### 5.1 உயர்த்தப்பட்ட நிதியுதவித்தொகையான ரூ.2,000/–ஐ மீன்பிடி தடை காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு வழங்குதல்

கடலில் மீன்களின் இனப்பெருக்கக் காலத்தினைக் கருத்தில் கொண்டும், கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திடவும், 2001-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும் , ஜூன் 15 முதல் ஜூலை 29 வரை மேற்கு

கடற்கரை பகுதியிலும், **45** நாட்களுக்கு கடலில் மீன்பிடிப்பதை அரசு தடைசெய்துள்ளது. மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில், மீன்பிடிக்கலன்களில் பணியாளர்களாகவும்/ தினக்கூலிகளாகவும் தொழில் புரியும் மீனவர்கள் வருமானம் ஈட்டுவதற்கு வேறு வழியில்லாததால், அவர்களது குடும்பத்தினைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். மீன்பிடிக் கலன்களில் பணியாளர்களாகவும் / தினக்கூலிகளாகவும் கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை மீனவர்களின் துயரத்தைக் களைந்திட, இந்த அரசானது வழங்கி வந்த நிவாரணஉதவித் தொகையினை 2011-12 ஆம் ஆண்டிற்கு, ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக, 17.5.2011 அன்று உயர்த்தியது. இத்திட்டம், **24.5.2011** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கப்பட்டு, **1.58** இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ.**31.63** கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், **2012–13**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.2 தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டமானது மத்திய–மாநில அரசுகளின் சமவிகித நிதியுதவி பங்களிப்போடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வருடமும், எட்டு மாதங்களில் மாதமொன்றிற்கு ரூ.70/- வீதமும், ஒன்பதாவது மாதம் ரூ.40/–ம் ஆக மொத்தம் ரூ.600/- ஐ மீனவர்கள் தங்களது பங்குத் தொகையாகச் செலுத்துகின்றனர். இத்தொகைக்கு சமமாக, மத்திய–மாநில அரசுகளின் பங்குத்தொகையாக தலா ரூ.600/- வீதம் ரூ.1,200/–யையும் சேர்த்து, மொத்தத் தொகையான ரூ.1,800/–ஐ மீன்பிடிப்புக்குச் செல்ல இயலாத மூன்று மாதங்களுக்கு பயனாளிகளுக்கு நிவாரணமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை 2011-12 ஆம்



ஆண்டிற்கு செயல்படுத்திட, மத்திய, மாநில அரசுகளின் நிவாரணத் தொகையாக ரூ.24.04 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் **13** கடலோர மாவட்டங்களில் **1.99** இலட்சம் கடல் மீனவர்களுக்கு ரூ.**23.82** கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், **2012–13** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.3 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம் மாநிலத்திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் எட்டு மாதங்களில் மாதமொன்றிற்கு ரூ.70/- வீதமும், ஒன்பதாவது மாதம் ரூ.40/- ம் ஆக மொத்தம் ரூ.600/- ஐ மீனவ மகளிர் தங்களது பங்குத் தொகையாக செலுத்துகின்றனர். மாநில அரசின் பங்காக, ரூ.1,200/- வழங்கப்பட்டு, மொத்தத்தொகையான ரூ.1,800/–ஐ கடலில் மீன்பிடிப்பு இல்லாத மூன்று மாதங்களுக்கு, பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக ரூ.**19.41** கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, **13** கடலோர மாவட்டங்களிலுள்ள **1.59** இலட்சம் கடல் மீனவ மகளிருக்கு ரூ.**19.10** கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், **2012–13**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.4 மீன்பிடிப்பு குறைந்த பருவமழைக் காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை ரூ.4,000/– வழங்குதல்

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் கடல் மீனவர் / மீனவ மகளிருக்கு கடலில் மீன்பிடிப்பு குறைந்த பருவமழைக் காலத்தில் வழங்கப்படுகிற நிவாரணத் தொகை ரூ.**1,800/–** அவர்களின் குடும்பத்தினை

நடத்துவதற்கு போதுமானதாக இல்லை என உணரப்பட்டது. எனவே, கடல் மீன்பிடிப்பு குறைந்த பருவமழைக்காலத்தில், கடலோர மாவட்டங்களிலுள்ள கடல் மீனவ குடும்பங்களின் துயரத்தினை களைந்திடும்பொருட்டு ஆகஸ்ட் 2011–இல் சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கும் இப்புதிய திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய திட்டத்தினை, 2011–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துவதற்காக மாநிலத்தின் 13 கடலோர மாவட்டங்களிலுள்ள 591 மீனவ கிராமங்களில் வசிக்கும் 1.70 இலட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக தலா ரூ.4,000/– வீதம் வழங்குவதற்கு ரூ.70.04 கோடி செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்புதிய திட்டத்தினை 10–11–2011 அன்று துவக்கி வைத்தார்கள். முதன் முறையாக மின்னனு பணப் பரிவர்த்தனை (ECS) மூலம் 11 கடலோர மாவட்டங்களிலுள்ள 1.36 இலட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு, 31.3.2012 அன்று வரை மொத்தம் ரூ.54.64 கோடி சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை பொறுத்தவரை, கடல் மீன்பிடிப்பு குறைந்த காலம் ஏப்ரல் மாதத்தில் துவங்குவதால், அம்மாவட்டத்திலுள்ள கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கும் பணி ஏப்ரல் 2012–இல் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டம், 2012–13ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.5 மீனவர் விபத்துக் குழுக் காப்புறுதி திட்டம்

இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் சமவிகித பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்



கீழ், ஒரு மீனவருக்கான மொத்த காப்புறுதி சந்தாத் தொகையான ரூ.30/–ஐ, மத்திய மாநில அரசுகள் சேர்ந்து (ரூ.15/– வீதம்) செலுத்துகின்றன. மீனவர்களிடமிருந்து சந்தாத் தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. விபத்தில் மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கும், நிரந்தர ஊனமடையும் மீனவருக்கும் ரூ.1,00,000/– காப்புறுதி நிவாரணம் வழங்கப்படுகிறது. பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டில், 6.08 இலட்சம் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் / மீனவமகளிர்களுக்கு காப்புறுதி சந்தாத் தொகையாக ரூ.91.20 இலட்சம் மாநில அரசின் பங்காக புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு செலுத்தப்பட்டு 10–12–2011 முதல் 09–12–2012 வரை காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், 2012–13ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.6 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்குதல்

பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ், நாட்டுப்படகுகளுக்கு வெளிப்பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரங்களை வாங்குவதற்காக, அலகு ஒன்றின் விலையில் 50 விழுக்காடு அல்லது ரூ.30,000/-ம் இவற்றில் எது குறைவோ, அந்தத் தொகை மானியமாக மீனவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டமானது, மத்திய–மாநில அரசுகளின் சம விகிதப் பங்களிப்பினைக் கொண்டதாகும். இத்திட்டத்தை, 2011-12-ஆம் ஆண்டில் செயல்படுத்திட, அரசு ரூ.7 கோடி நிதி ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் 2012–13ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.7 அதிவேக எரியெண்ணெய் மீதான (High Speed Diesel) மத்திய கலால் வரித் தொகையினை திருப்பி அளித்தல்

இத்திட்டம், 100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியாக வழங்கப்படும் திட்டமாகும். விசைப்படகுகளின் இயக்கச் செலவினம் அதிகரித்து, மீன்பிடித் திறன் குறைந்து வருவதால், விசைப்படகு உரிமையாளர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் விதமாக, அதிவேக எரியெண்ணெய் மீதான கலால்வரித் தொகையினை, விசைப்படகு உரிமையாளர்களுக்கு அரசு மானியமாகத் திருப்பி அளிக்கிறது. அதிவேக எரியெண்ணெய்க்கான திருப்பியளிக்கப்படும் கலால் வரியானது, லிட்டர் ஒன்றிற்கு ரூ.3/- வீதம் மாதம் ஒன்றிற்கு ஒரு விசைப்படகிற்கு அதிகபட்சம் 500 லிட்டருக்கு தீவிர மீன்பிடிப்பு மாதங்களுக்கு எரியெண்ணெய்க்கான மானியமாக வழங்கப்படுகிறது. இந்த மானியத்தொகையானது, 10வது ஐந்தாண்டுதிட்டத்திற்கு முந்தைய காலத்தில் பதிவுசெய்யப்பட்ட 20 மீட்டர் நீளத்திற்கு குறைவான மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய, விசைப்படகு உரிமையாளர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை, இத்திட்டத்தை செயல்படுத்திட இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் 13.06.2011 அன்று அளித்த கோரிக்கை மனுவில், இத்திட்டத்தில் பயனடைவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகள் நடைமுறைக்கும், அனைத்து கடலோர மாநிலங்களிலும் செயல்படுத்துவதற்கும் இயலாத நிலையில் உள்ளதால், அவைகளை உடனடியாக மறு ஆய்வு செய்து நிபந்தனைகளைத் தளர்த்தி, இத்திட்டம் செயலாக்கம் பெறும் வகையில் மாற்றி அமைத்திட கோரப்பட்டுள்ளது.



## 5.8 மீனவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெயினை வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கு, தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு விற்பனைவரி விலக்களித்து வருகிறது. இதன்படி, விசைப்படகு ஒன்றிற்கு ஆண்டொன்றிற்கு 15,000 லிட்டரும், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு 3,600 லிட்டரும் விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய்யை மீனவர்கள் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டம், 2012-13-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.9 பாரம்பரியமீன்பிடிபடகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிற்சாலை மண்ணெண்ணையினை மானிய விலையில் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடிக்கலன்களின் உரிமையாளர்களுக்கு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மண்ணெண்ணையினை மானிய விலையில், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25/-வீதம், மாதமொன்றிற்கு 200 லிட்டர் வழங்கப்படுகின்றது. 2011-12ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட, அரசு ரூ.47.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகையில் ரூ.23.62 கோடி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் ஆகியவற்றிற்கு வரி விலக்களிக்கப்பட்ட மண்ணெண்ணெயினை மானிய விலையில் மீனவர்களுக்கு

விடுவித்திட வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2012-13-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.10 மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10 வது மற்றும் +2 வகுப்பு மாணவ / மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்**

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் கல்வி கற்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு 10 வது மற்றும் +2 வகுப்புத் தேர்வில், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு, தமிழக அரசால் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2012-13 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆ) நிவராணத்திட்டங்கள்**

**5.11 "தானே"புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

30–12–2011 அன்று கடலூர் மற்றும் புதுச்சேரிக்கு இடைப்பட்ட கடற்கரைப் பகுதியில் 'தானே' புயல் கரையை கடந்த போது, தமிழகத்தின் 5 வடக்கு கடலோர மாவட்டங்களில் மீன்பிடி உபகரணங்களுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்கிட ஏதுவாக, அரசால் ரூ.20. கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கி அரசாணை எண்.10 வருவாய் (D.M.II) துறை நாள் 6–1–2012ல் ஆணைகள் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அரசாணை எண்.(டி) 18 வருவாய் (டி.எம்.2) துறை நாள் 10.01.2012 ல், 'தானே' புயலில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு, வழங்கப்பட வேண்டிய நிவாரணத்



தொகையினை வழங்கிட 2004–ஆம் ஆண்டு சுனாமியின் போது நிவாரணம் வழங்க வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளை அடிப்படையாகக்கொண்டு, நிவாரண உதவிகள் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணைகள் வழங்கியது. மேலும், பாதிக்கப்பட்ட மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்கிட ரூ.14.94 கோடி விடுவித்து ஆணையிடப்பட்டது. அதன்படி, ஐந்து கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 9,754 பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**5.12 அயல்நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட தினஉதவித் தொகை வழங்குதல்**

கடலில் மீன்பிடிக்கும்போது அயல் நாட்டினரால் சிறைபிடிக்கப்படும், உண்மையான மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், மீனவர்கள் வீடு திரும்புவரை நாளொன்றுக்கு ரூ.50/– வீதம் தின உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன், அரசாணை (3டி) எண்.6, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்6) துறை நாள் 24.8.2011–ன்படி தின உதவித் தொகையினை ரூ.50/–லிருந்து ரூ.250/– ஆக உயர்த்தியும், திட்டத்தை செயல்படுத்திட 2011–12 ஆம் ஆண்டில் ரூ.6. இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைத்திட ஏதுவாக இத்திட்டம் மாவட்ட ஆட்சி தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2012–13 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.13 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, மீனவர் வீடு திரும்பும் வரை தினப்படியாக நாளொன்றுக்கு ரூ.50/– அல்லது மாதமொன்றிக்கு ரூ. 1,500/– வீதம் தின உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன், இத் தினஉதவித் தொகையானது ரூ.50/– (மாதமொன்றுக்கு ரூ.1,500/–) லிருந்து ரூ.250/– (மாதமொன்றுக்கு ரூ.7,500/–) ஆக உயர்த்தியும், இரண்டு ஆண்டுகள் வரை வழங்கிட ஏதுவாக, 2011–12 ஆம் ஆண்டில் ரூ.12. இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடலோர மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2012–13 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.14 இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கு மற்றும் காயமடையும் மீனவருக்கும் நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், சர்ச்சைக்குரிய தங்களது பாரம்பரிய பகுதியான பாக் நீரிணைப்பகுதி மீன்பிடி தொழிலில் ஈடுபடும் போது, இயந்திர கோளாறு மற்றும் இயற்கை சீற்றம் காரணமாக இலங்கை கடற் பகுதிக்குள் இழுத்து செல்லப்படும் போது, இலங்கை கடற் படையினரால் சிறைபிடித்தல், துன்புறுத்துதல் சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகுதல் போன்ற நிகழ்வுகளும் ஏற்படுகின்றன.

அவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3. இலட்சம்



வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக் கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5. இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. கொடுங்காயம் மற்றும் சிறு காயம் அடையும் மீனவர்களுக்கு கருணைத்தொகையாக முறையே ரூ.50,000/– மற்றும் ரூ.20,000/– வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2012–13 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## இ. கச்சத் தீவினை திரும்பப் பெறுதல் – பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலை

பிரச்சனைக்குரிய பாக் ஜலசந்திப் பகுதியில், தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டுவதிலும் கச்சத் தீவினை திரும்பப் பெற்றிடவும் தமிழ் அரசு அதிகபட்ச முன்னுரிமை அளித்து வருகிறது. 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இந்தியா– இலங்கை இடையேயான உடன்படிக்கையின்படி, இந்திய அரசால் இலங்கைக்கு அளிக்கப்பட்ட கச்சத்தீவினை, திரும்பப் பெறுவதற்கு ஆக்கப் பூர்வ நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. கச்சத்தீவினை நிரந்தர குத்தகை அடிப்படையில் பெறுவதற்கும், கச்சத்தீவினை சுற்றியுள்ள பகுதிகளில் உரிமம் வழங்கி மீன்பிடிப்பு மேற்கொள்வதற்கு அனுமதி அளித்திட கோரியும், மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது. கச்சத்தீவினை திரும்ப பெறுவதற்காக உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு (குடிமை) எண்.561/ 2008–இல் தமிழக அரசின் வருவாய் துறையை ஒரு பிரதி வாதியாக இணைத்துக் கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கச்சத்தீவினை தமிழ்நாட்டிற்கு மீண்டும் பெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13.6.2011 அன்று

மாண்புமிகு பாரத பிரதமருக்கு கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈ. நிலையான வளம்குன்றா வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம்**

உலக வங்கியின் நிதியுதிவுடன், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் ( FAO ) மற்றும் மீன்வளத்துறையும் இணைந்து, நிலையான வளம்குன்றா வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மைத் திட்டத்தை (FIMSUL) செயல்படுத்தியுள்ளது. மீன்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை, கொள்கை கோட்பாடுகளை வரையறுத்தல் மற்றும் இத்திட்டத்தின் மூலம் பல்வேறு வகையான தொழில் சார்ந்த பயனீட்டாளர்களுக்கு உரிய செயல் திட்டம் மற்றும் தகுதியை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

**உ. உட்கட்டமைப்பு வசதிகள்**

**5.15 மத்திய – மாநில அரசுகளின் சம விகிதப் பங்களிப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல் (50:50)**

**(அ) குளச்சல் மீன்பிடித் துறைமுகம்**

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசு ரூ.27.10 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.19.12 கோடியை நான்கு தவணைகளில் அரசு விடுவித்துள்ளது.



கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் அலை தடுப்புச்சுவர்கள் கட்டும் பணி மற்றும் குளச்சல் மீன்பிடித்துறைமுகத்திற்கு செல்லும் அணுகுசாலை அமைக்கும் பணிகள் முதற்கட்ட பணிகளாக எடுக்கப்பட்டு, கிழக்கு அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி 103 மீட்டர் நீளத்திற்கும் (மொத்த நீளம் 118 மீட்டர்), மேற்கு அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி 430 மீட்டர் நீளத்திற்கும் (மொத்த நீளம் 530 மீட்டர்) முடிவடைந்துள்ளன. பிரதான அலைதடுப்புச்சுவற்றில் கடற்புறமுள்ள சரிவில், கோர்லாக் ஆர்மர்களை அடுக்கும் பணிகள் 180 மீட்டர் நீளத்திற்கு முடிவடைந்துள்ளன. கிழக்கு மற்றும் மேற்கு அலை தடுப்பு சுவர்களுக்கு செல்லும் சாலைப்பணி மற்றும் எடைமேடை அமைக்கும் பணிகளும் முடிவடைந்துள்ளன. இரண்டாவது கட்டமாக, படகு கட்டும்தளம், தூர்வாரும் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், உள்ளூர் மீனவர்களின் கோரிக்கைகளுக்கிணங்க பூண்டி ஐ.எச்.எச் நிறுவனம், மாதிரி ஆய்வினை மேற்கொண்டு அனுமதி பெற்றுள்ள திட்டத்தில் மாற்றங்களுடன் திருத்திய வரைபடத்தைத் தயாரித்துள்ளது. துறைமுகப் பகுதியில், மண் சேருவதால் ஏற்படும் பிரச்சனைகளை ஆராய்ந்து, மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் மாற்றங்கள் குறித்தான கருத்துக்களை தெரிவிப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள மத்திய அரசு நிறுவனமான, புனேயிலுள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆராய்ச்சி நிலையத்திற்கு (Central Water and Power Research Station) ரூ.35 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி, குளச்சலில் மீன்பிடித் துறைமுக அமைக்க ரூ.60 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் பரிந்துரையுடன் மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் கூடுதல் நிதியுதவி பெறப்படவுள்ளது.

### (ஆ) தேங்காய்ப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித்துறைமுகம் அமைத்திட மத்திய அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றிட, மத்திய – மாநில அரசுகள் ரூ.30 கோடி நிதியை மூன்று தவணைகளாக விடுவித்துள்ளன.

பிரதான அலைதடுப்பு சுவர் அமைக்கும் பணி 530 மீட்டர் நீளத்திற்கும் (மொத்த நீளம் 580 மீட்டர்) மற்றும் "லீவார்டு'' (Leeward) அலைதடுப்பு சுவர் அமைக்கும்பணி 105 மீட்டர் நீளத்திற்கும் (மொத்த நீளம் 120 மீட்டர்) முடிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, பிரதான அலைதடுப்பு சுவரின் கடற்புற சரிவில் 510 மீட்டர் நீளத்திற்கு (மொத்த நீளம் 580 மீட்டர்) "கோர்லாக் ஆர்மர்கள்'' அடுக்கப்பட்டுள்ளன. புனேயில் உள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆராய்ச்சி நிறுவனத்தின் அலைதடுப்பு சுவற்றின் குறுக்கு வெட்டுத் தோற்றம் குறித்த ஆலோசனையின்படி ரூ.71.11 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு பரிந்துரையின்படி மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூடுதல் நிதியுதவி பெறப்படவுள்ளது.

இரண்டாவது கட்டமாக, படகுகட்டும் தளம், தூர்வாரும் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### (இ) பூம்புகார் மீன்பிடித் துறைமுகம்

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதியுதவியைப்பெற்று மீன்பிடித்துறைமுகம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. சென்னை தேசிய கடல் தொழில்நுட்ப நிலையம்



(National Institute of Ocean Technology) மூலம் மாதிரி ஆய்வு மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. தொல்லியல் கடலாய்வு மேற்கொள்ளப்பட்டு, மேற்படி இடத்தில் தொல்லியல் சம்பந்தமான கட்டமைப்புகளோ, அதற்கான சான்றுகளோ இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த சுற்றுலா மற்றும் கலை பண்பாட்டுத்துறை மற்றும் இந்திய தொல்லியல் நில அளவைத் துறையின் தடையில்லா சான்று வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மாநில மற்றும் மத்திய அரசு அளவிலான தடையில்லா சான்று பெறும் பொருட்டு கூடுதல் ஆய்வு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. பெங்களூர், "சைசப்'' (CICEF) நிறுவனத்தின் ஆலோசனையின் பேரில் திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் இத்திட்டத்திற்கான மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்படும்.

### (ஈ) மூக்கையூர் மீன்பிடித் துறைமுகம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரத்தில் மீன்பிடி விசைப்படகுகளை நிறுத்த தேவையான தங்குதள வசதிகள் தற்போது போதுமானதாக இல்லை. எனவே, மீன்பிடி விசைப்படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதிகளை உருவாக்குவதற்காக மூக்கையூரில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதியுதவியைப் பெற்று மீன்பிடித் துறைமுகம் அமைத்திட அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனை செய்யத்தக்கமைக்கான ஆய்வுகள் மற்றும் ஆலோசகரை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழக அரசு, கடல் ஆழம் குறித்தான அளவைப்பணி மற்றும் கடல் அலை குறித்தான ஆய்வுப்

பணி மேற்கொள்வதற்காக ரூ.8.75 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

**5.16 "பாட்"(BOT – கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றிஒப்படைத்தல்) திட்டத்தின் கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் மீனவ கிராமத்தில் "பாட்" (BOT) முறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. முட்டம் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.53.92 கோடி ஆகும். கிழக்குப் பகுதியில் அலை தடுப்புச்சுவர் அமைக்கும் பணி 215 மீட்டருக்கும், தெற்குப் பகுதியில் அலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி 1.5 கிலோ மீட்டர் நீளத்திற்கும், அலை தடுப்பு சுவற்றின் சரிவில் கான்கிரீட்டிலான **9,260** எண்ணிக்கையுள்ள நான்முக பிளாக்குகள் அடுக்கும்பணியும் முடிவடைந்துள்ளன. " திருவாளர்கள் ஜேப்பியார் மீன்பிடித் துறைமுகம் முட்டம் பிரைவேட் லிமிடெட்"., இதுவரை ரூ.34 கோடி இத்திட்டத்திற்கு செலவிட்டுள்ளது.

"கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றி ஒப்படைத்தல்" திட்டத்தின்கீழ் சலுகைதாரருக்கு 50 விழுக்காடு நிதி உதவி அளித்திட மத்திய அரசு ஒப்புதலை அளித்து, தனது முதல் தவணையாக ரூ.**5** கோடியும் இரண்டாவது தவணையாக ரூ.**6.116** கோடியும் விடுவித்துள்ளது. அலிக்கால், பிள்ளைத்தோப்பு வரை அலை தடுப்பு சுவரினை நீட்டித்திடவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம்துறையில் "பூட்" (BOOT) முறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான மாதிரி ஆய்வு, சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் சுற்றுச் சூழல் மேலாண்மை திட்ட அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.



கட்டுமானப்பணியினை மேலும் தாமதமில்லாமல் துவக்கிட சலுகைதாரருக்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

அதேபோல், கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியில் "பூட்" (BOOT- "கட்டுதல், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் மாற்றி ஒப்படைத்தல்") முறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க முதன்மை ஆய்வு மற்றும் செய்யத் தக்கமைக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5.17 உலக வங்கி நிதியுதவியுடன் அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் (ETRP)**

உலக வங்கி நிதியுதவியுடன் அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்திட ரூ.**103.25** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அ) இரண்டு மீன்பிடித்துறைமுகங்களை மறுசீரமைத்து நவீனப்படுத்துதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம் மற்றும் பழையாறு மீன்பிடித்துறைமுகங்களை மறுசீரமைத்து நவீனப்படுத்துவதற்காக ரூ.**63.21** கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

**ஆ) இரண்டுஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாக திறந்து வைத்தல்**

கடலூர் மாவட்டத்திலுள்ள வெள்ளாறு (ரூ.**10.24** கோடி) மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள உப்பனாறு (ரூ.**5.20** கோடி) ஆகிய இரு ஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாக திறந்து வைத்திட ரூ.**15.44** கோடி அரசால்

ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

**இ) இரண்டு புதிய மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள நாகூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம் பரங்கிபேட்டை வட்டத்திலுள்ள அன்னன்கோவில் ஆகிய இரு கிராமங்களில் முறையே ரூ.10.60 கோடி மற்றும் ரூ.13.50 கோடி செலவில் இரண்டு புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதையடுத்து, இரண்டு இடங்களிலும் கட்டுமானப்பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**ஈ) சின்னமுட்டம் மீன்பிடித்துறைமுகத்தில் பனிக்கட்டி நிலையம் அமைத்தல்**

இத்திட்டத்திற்கு ரூ.0.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது

**5.18 சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் பத்து புதிய மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்**

பல்வேறு கடற்கரையோர கிராமங்களில் பத்து இடங்களில் புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்க அரசால் ரூ.49.97 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரி கிராமத்தினை தவிர (மதிப்பீடு ரூ.4.04 கோடி) மற்ற இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. உவரி கிராமத்தில் கடலரிப்பை தடுப்பதற்காக, பொதுப்பணித்துறை மூலம் நடைபெறும் பணிகள் முடிவடைந்தவுடன் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். கீழ்கண்ட அட்டவணை எண். 3 இல்



கட்டுமானப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய நிலை குறித்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.3 – மீன் இறங்கு தளம் கட்டுமானப் பணியின் முன்னேற்ற விவரம் (31.3.2012 அன்றுள்ளபடி)**

| மாவட்டம் | கிராமத்தின் பெயர் | தொகை (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| திருவள்ளூர் | அண்ணாமலைச்சேரி | 4.72 | சுற்றுச் சுவர் அமைக்க 'பைல்' (Pile) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது |
| | பெரியமாங்கோடு | 4.72 | கட்டிடங்களுக்கு 'பைல்' (Pile) அமைக்கும் பணி முடிவடைந்துள்ளன. |
| | எண்ணூர் முகத்துவாரக்குப்பம் | 5.45 | கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. |
| காஞ்சிபுரம் | கடலூர்பெரியகுப்பம் | 4.76 | கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. |
| விழுப்புரம் | எக்கியார்குப்பம் | 4.76 | மீன் உலர் களம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது. |
| புதுக்கோட்டை | ஆர். புதுப்பட்டினம் | 4.41 | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| இராமநாதபுரம் | கீழக்கரை | 5.32 | பணிகள் முடிவடைந்துள்ளது. |
| தூத்துக்குடி | திரேஸ்புரம் | 7.03 | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| | பெரியதாழை | 4.76 | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |

## 5.19 கம்பியில்லாத் தொலை தொடர்பு சாதன வசதிகள்

மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடித் தொழில் புரியும் போது, இயற்கைச் சீற்றங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்திட அவர்கள் பயன்படுத்தும் மீன்பிடிக் கலன்களில், புவிநிலை அறியும் (Global Positioning System) கருவியோடு VHF (Very High Frequency) ரேடியோ கருவிகளை பொறுத்தி கம்பியில்லாத் தொலை தொடர்பு வசதியினை தமிழக அரசு துவக்கியுள்ளது. இத்திட்டத்தினை, 13 கடலோர மாவட்டங்களில் இரு கட்டங்களாக மொத்தம் ரூ.57.60 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் கம்பியில்லாத் தொலைத்தொடர்பு சாதனங்களை நிறுவிட அரசு ரூ.7.73. கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி, இத்திட்டம் “ELCOT” மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொண்டி, பாம்பன் மற்றும் சின்ன ஏர்வாடி ஆகிய மூன்று இடங்களில் உயர்மட்ட கோபுரத்துடன் கூடிய கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. 3,100 எண்ணிக்கையிலான கையடக்கமான VHF ரேடியோ கருவிகள் வாங்கப்பட்டு, நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கிட தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. புதுதில்லியிலுள்ள மத்திய தொலைதொடர்பு அமைச்சகத்தின் “கம்பியில்லா திட்ட ஆணையத்திடமிருந்து” (Wireless Planning Commission), உரிமம் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், நாட்டுப்படகு மீனவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். விசைப்படகு மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் இக்கருவிகள் வழங்கப்படவுள்ளன.



## 5.20 தமிழ்நாட்டில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில் உள்ள கடலோர நகரங்களில், பொதுத்துறை – தனியார் கூட்டு முயற்சியுடன் உட்கட்டமைப்பு வசதிகளான மீன்பதன பூங்காக்களை பல கட்டங்களில் அமைத்திட அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சென்னையில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தினை செய்யத்தக்கமைக்கான ஆய்வு செய்தல் மற்றும் பரிவர்த்தனை ஆலோசனைப் பணிகளை (Transaction advisory services) மேற்கொள்ளும் நிறுவனத்தை தேர்வு செய்திடும் பணி, தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனத்திடம் (Tamil Nadu Urban Infrastructure and Financial Services Limited (TNUIFSL) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செய்யத்தக்கமைக்கான கலந்தாய்வு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அறிக்கை பெறப்பட்டவுடன், தகுதி வாய்ந்தவர்கள் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டு மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்கப்படும்.

## ஊ. மீன்வள ஆதாரங்கள் / உற்பத்தியை அதிகரித்தல்

## 5.21 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

சமீபகாலங்களில், அண்மைக்கடல் பகுதிகளில் அதிகளவு மீன்பிடிப்பின் காரணமாக மீன்வளமானது அளவிற்கதிகமாக பிடிக்கப்பட்டு வருகிறது. மீன்வளப் பாதுகாப்பு மற்றும் கடல்வள மேலாண்மையின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம், 1983. அமலாக்கப்பட்டுவருகிறது. கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வேறு வகை மாற்று மீன்பிடிப் முறைகளை மேற்கொள்ளுதல்

ஆகியவை மீன்வளத்தினைப் பாதுகாப்பதற்கான சில பாதுகாப்பு நடவடிக்கைகளாகும்.

**5.22 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்**

கடல் பகுதியில் உற்பத்திதிறனை அதிகரிக்க, செயற்கை மீன் உறைவிடங்கள் உதவுகின்றன. இவைகள், கடல்வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், குஞ்சுகள் பாதுகாப்பாக உயிர்வாழவும் வாய்ப்பளிப்பதால், மீன் உற்பத்தி அதிகரிக்கிறது. மேலும், செயற்கை மீன் உறைவிடங்கள் அண்மைக்கடல் பகுதியில் இழுவலைகளைப் பயன்படுத்த தடையாகவும் அமைகிறது. அண்மைக்கடல் பகுதியில், மீன் பாதுகாப்பு நடவடிக்கையாக செயற்கை மீன் உறைவிடங்களை அமைப்பதற்காக அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 18 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணி, மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் செயல்படுத்தப்பட்டது. 2011–12 ஆம் நிதியாண்டில், ரூ.2.63 கோடி செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் 17 இடங்களிலும், ரூ.30 இலட்சம் செலவில் பகுதி 2 திட்டத்தின் கீழ் 2 இடங்களிலும் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்திட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



**5.23 மீன்பிடி விசைப்படகுகள் அல்லது ஆழ்கடலில் தூண்டில் மூலம் சூரைமீன் பிடிக்கும் படகுகள் வாங்குவதற்கு 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் மானியமாக மீனவர்களுக்கு வழங்குதல்**

தூரக்கடல் மீன்வள ஆதாரத்தில் ஒன்றான சூரை மீன்வளம் இன்னும் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. மீனவர்கள், மாற்று மீன்பிடிப்பு முறைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, புதிய மீன்பிடி கலன்களை வாங்குவதற்கு அல்லது ஆழ்கடலில் தூண்டில் முறையில் சூரை மீன்பிடிப்பிற்கு ஏற்றுவாறு மீன்பிடி விசைப்படகுகளை மாற்றி அமைக்க அல்லது இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்களை மாற்றியமைக்க மானியமாக படகு ஒன்றிற்கு 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வழங்கிடும் திட்டம் ஒன்றினை அரசு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்து ஆண்டுகளில் பல கட்டங்களில் செயல்படுத்த, அரசால் ரூ.25 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 2011–12ஆம் ஆண்டிற்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயனாளிகள் தேர்வு முடிந்து பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**5.24 ஆழ்கடல் மீன்பிடிப்பு – தாய் கப்பல் கோட்பாட்டின் அடிப்படையில் மீன்பிடி கப்பல் நிறுவுதல்**

மீன்பதப்படுத்தும் வசதிகள் மற்றும் ஆழ்கடல் பகுதியில் வணிக ரீதியாக மீன்பிடிக்கும் விசைப்படகுகளுக்குத் தேவையான இடுபொருட்களை வழங்கிடும் வகையில், கடலின் நடுவே மீன்பதப்படுத்தும் அலகுடன் கூடிய தாய் கப்பலை நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செய்யத்தக்கமைக்கான அறிக்கை மற்றும் பரிவர்த்தனை ஆலோசனைப் பணிகளை மேற்கொள்ளும் ஆலோசனை நிறுவனத்தை தேர்வு செய்யும் பணிக்காக, தமிழ்நாடு நகர்ப்புற

உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) அமர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செய்யத்தக்கமைக்கான விரிவான அறிக்கை தயாரிப்பதற்கு விருப்பத்தினை தெரிவிக்க கோரும் விளம்பரத்தினை தேசிய மற்றும் உலக அளவில் அச்சு ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது. கலந்தாலோசனை அறிக்கை பெறப்பட்டவுடன், தகுதி வாய்ந்த ‘‘பொதுத்துறை – தனியார்’’ நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆழ்கடலில் தாய்கப்பல் நிறுவப்படும்.

## 6. உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளத்திற்கென, சுமார் 3.73 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பல்வேறு நீர்நிலைகளான நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன ஏரிகள் மற்றும் பருவ காலங்களில் தண்ணீர் வசதி பெறும் பாசன ஏரிகள், சிறிய மற்றும் குறுகிய கால தண்ணீர் வசதி கொண்ட குளங்கள், ஆறுகள், கழிமுகங்கள், உவர்நீர் மற்றும் உப்பங்கழிப்பகுதிகள் உள்ளன. இந்நீர் ஆதாரங்கள் பருவமழையைச் சார்ந்துள்ளதால், பெரும்பாலான நீர்நிலைகளில் தண்ணீர் நிலைத்திருக்கும் காலம் குறைவாக உள்ளது. உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க, வேகமாக வளரக்கூடிய வளர்ந்த மீன்குஞ்சு விரலிகளை குறுகிய பருவ கால நீர்நிலைகளில் வளர்த்தல், உற்பத்தித்திறனை அதிகரிக்க நீர்த்தேக்கங்களில் கூண்டுகள் மற்றும் அடைப்பான்களில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை மீன்வளத்துறை எடுத்து வருகிறது.

### 6.1 நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாட்டில் 62 பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, மீன்பிடிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நீர்த்தேக்கங்களில் உள்ள மீன்வள ஆதாரங்களை உரிமச்சீட்டு



வழங்கல், அருகாமையிலுள்ள உள்நாட்டு மீன்வள கூட்டுறவு சங்க உறுப்பினர்களைக் கொண்டு பங்கு மீன்பிடித்தல் மற்றும் மீன் பாசி குத்தகைக்கு விடுதல் போன்ற முறைகளில் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகின்றன. மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து வளர்த்தெடுக்கப்படும் பெரு விரலிகள் நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுகின்றன. மீன் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்துடன் 80-100 மி.மீ அளவுள்ள பெருவிரலிகளை இருப்பு செய்திடுவதற்கு மீன்குஞ்சு ஒன்றிற்கு ரூ.1/–வீதம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதி உதவியளிக்கிறது. **2011–12**ஆம் ஆண்டில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலம் ரூ.**79.04** இலட்சம் பெறப்பட்டு, **15** நீர்த்தேக்கங்களில் **55.35** இலட்சம் வளர்ந்த விரலிகள் இருப்பு செய்யப்பட்டதோடு, **33.71** இலட்சம் வளர்ந்த விரலிகள் **38** நீர்த்தேக்கங்களில் மீன்வளத்துறை மூலம் இருப்பு செய்யப்பட்டுள்ளது. **2012–13**ஆம் ஆண்டில் **164** இலட்சம் வளர்ந்த விரலிகள் இருப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.2 மீன்குஞ்சு உற்பத்தி / மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்

மீன்வளத்துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில், ஆண்டொன்றிற்கு 402.5 மில்லியன் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தித் திறன் கொண்ட 5 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2011-12-ஆம் ஆண்டில், 5 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து 193.5 மில்லியன் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து **117.30** இலட்சம் இளமீன்குஞ்சுகளும், **49.39** இலட்சம் விரலிகளும் மற்றும் **135.24** இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகளும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

மீன்வளத்துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 33 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள், ஆண்டொன்றிற்கு 85 மில்லியன் மீன்குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். மீன்பண்ணைகளில் மொத்தமுள்ள 48.88 ஹெறக்டேரில் 33.37 ஹெறக்டேர் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. பழுதடைந்த நிலையில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களை தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத்திட்டம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள–நிலவளத்திட்டம் போன்ற திட்டங்களிலிருந்து நிதி உதவி பெற்று, பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் மீன்குஞ்சு தேவையில் தன்னிறைவு பெறும் நோக்கோடு, வேளாண் விவசாயிகள் மீன்குஞ்சு உற்பத்தி / மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் அமைத்திட ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மீன்குஞ்சு உற்பத்தி/வளர்ப்பு பண்ணைகள் அமைக்க 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தியதன் மூலம், ஆண்டொன்றிற்கு 35 மில்லியன் மீன்குஞ்சு விரலிகள் கூடுதலாக தனியார் மூலம் உற்பத்தி செய்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 6.3 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாட்டில், உள்நாட்டு மீன்வளர்ப்பு செயல்பாடுகளைப் பரவலாக்கி, கிராமப்புற வேலை வாய்ப்பினை உருவாக்கிட மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ்



12 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்படுகின்றன. மீன்வளர்ப்போருக்குத் தேவையான பயிற்சி, தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் மீன்வளர்ப்பிற்கு மானியம் வழங்குதல் மூலமாக மீன்வளர்ப்போரை ஊக்குவித்தல் போன்றவை, மீன்வள மேம்பாட்டு முகமையின் முக்கியப் பணிகளாகும். 2011-12 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1.33 கோடி மானியமாக **152** மீன்வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு, **159** ஹெறக்டேர் மீன்வளர்ப்பில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் **2012–13–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வாங்குவதற்கும் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக மானியம் வழங்கப்பட்டுள்ளது. மத்திய மாநில அரசகளின் பங்களிப்புத் திட்டத்தின் **(75:25)** கீழ், சுமார் **1,111** உள்நாட்டு மீனவர்களுக்கு மானிய விலையில் மீன்பிடி வலைகள் வாங்குவதற்காக ரூ.**33.33** இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### 6.4 உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில் 56,000 ஹெறக்டேர் பரப்புள்ள கழிமுகப்பகுதிகள், உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேற்கொள்ள உகந்ததாக உள்ளன. 6,019.21 ஹெறக்டேர் பரப்பில் தற்பொழுது, 2,748 இறால் பண்ணைகள் அமைந்துள்ளன. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பண்ணைகளை பதிவு செய்தல் கட்டாயமானதாகும். இதுவரை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடம் **4,358.66** ஹெறக்டர் பரப்பளவு உள்ள **1,596** பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலைத்த, நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்க, தமிழ்நாட்டில் திருவள்ளுர், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய

5 மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு உவர்நீர்வாழ் உயிரினவளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் மத்திய–மாநில அரசுகளின் பங்களிப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ், இயங்கி வருகின்றன.

உவர்நீர் இறால் பண்ணை அமைப்பதற்கு, 2 ஹெக்டேர் நீர்பரப்பு அல்லது அதற்கு குறைவாக உள்ள பண்ணைகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.60,000/– வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 2011–12 –ஆம் ஆண்டில், மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் (75:25), ரூ.3.33 கோடி (மத்திய அரசு பங்கு ரூ.2.5 கோடி + மாநில அரசு ரூ.83.33 இலட்சம்) வழங்க அரசு ஒப்பளித்து விடுவித்துள்ளது.

### 6.5 குளிர் நீர் மீன்வளர்ப்பை மேம்படுத்துதல்

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் சில பகுதிகளில் அமைந்துள்ள உயர்மட்ட நீரோடைகள் 'டிரௌட்' வகை மீனினங்கள் வளர்வதற்கு உகந்ததாக திகழ்கின்றன. 'ட்ரௌட்' மீன்வளத்தினை மேம்படுத்திட நீலகிரியில் அமைந்துள்ள அவலாஞ்சி, 'ட்ரௌட்' (Trout) மீன்குஞ்சு பொறிப்பகத்திலிருந்து மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன்வளத்துறை மூலம் நீரோடைகளில் இருப்பு செய்யப்படுகின்றன. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் அவலாஞ்சியில் உள்ள 'ட்ரௌட்' மீன்குஞ்சு பொறிப்பகத்தை ரூ.30 இலட்சத்தில் மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

### 6.6 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 2011–12ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிபாறை மீன்குஞ்சு பண்ணைக்கு கூடுதல் உட்கட்டமைப்பு



வசதி மற்றும் சிற்றார் அணை–2 இல் அரசு மீன் குஞ்சு பொறிப்பகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில், 120 சுய உதவிகுழு உறுப்பினர்களுக்கு வண்ண மீன்வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 2 வண்ண மீன் வளர்ப்பு நிலையம் அமைத்து தரப்பட்டுள்ளது. மேலும், பிளவக்கல் அணை மீன்குஞ்சு பண்ணையின் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கூறிய திட்டங்களை செயல்படுத்திட, அரசு 2011–12ஆம் ஆண்டில் ரூ.42.92 இலட்சம் மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 7. ஆராய்ச்சி

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் இரண்டு ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், புவனேஸ்வர், மத்திய உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், சென்னை, மத்திய கடல்மீன்வள ஆராய்ச்சி நிலையம் கொச்சி மற்றும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி ஆகியவற்றோடு மீன்வளத்துறை ஒருங்கிணைந்து ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. விரிவாக்கம் மற்றும் பயிற்சி

விரிவாக்கம் மற்றும் பயிற்சியானது, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் பற்றி பயனாளிகள் தெரிந்து கொள்ளும் வகையில் முக்கிய பங்காற்றுகிறது. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மத்திய அரசு ஆகியவைகளின் நிதி உதவியுடன், தேவை அடிப்படையில்

பல்வேறு பயிற்சிகள் மீன்வளத்துறையால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

**8.1 மீனவ இளைஞர்களுக்கு கடல் சார் கல்வி**

பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு தேறிய மீனவ இளைஞர்கள் கடல்சார் கல்வி படித்திட, 100 மீனவ இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொருவருக்கும், ரூ.50,000/-வீதம் ரூ.50 இலட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதனை தொடர்ந்து மேலும் 4 பயிற்சிகளை இத்திட்டத்தின்கீழ் கூடுதலாகச் சேர்த்து அரசு ஆணையிட்டுள்ளது. **2011–12–**ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் பயனடைய, 157 மீனவ இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டம், 2012-13 –ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**8.2 மீன்வளத் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம்**

மீன்வளத்தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம், மீனவ மக்களுக்கு தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சி அளிக்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. இது வரை 3,002 மீனவர்களுக்கு கடல்பாசி வளர்ப்பு, நண்டு வளர்ப்பு, சுகாதார முறையில் மீன்களைக் கையாளுதல், இயந்திரப் படகு பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல், சூரை மீன் பிடிப்பு, கடல் வண்ண மீன் வளர்ப்பு, கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்பு ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

முன்னோடி திட்டமாக, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.52.50 இலட்சம் செலவில் நன்னீர் நிலைகளில் கூண்டுகளில் மீன் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தில் கூண்டுகளில் மீன்வளர்ப்பு செய்யப்பட்டு



வருகிறது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் பட்சத்தில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் நிதியை பயன்படுத்தி, இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். புதிதாக துவக்கப்படவுள்ள தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்திற்கு மீன்வள தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையப் பணிகள் மாற்றப்படவுள்ளது.

**9. சிறப்புத் திட்டங்கள்**

**9.1 கடல் மீனவர்களுக்கு “பயோமெட்ரிக்” (Bio-Metric) மின்னனு அடையாளஅட்டை வழங்குதல்**

**26/11** மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர், கடலோர பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு கடல் மீனவர்களுக்கு “பயோமெட்ரிக்” (Bio-Metric) மின்னனு அடையாள அட்டை வழங்குவதற்காக மத்திய அரசின் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.**1.16** கோடி தமிழக அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. “பயோமெட்ரிக்” மின்னனு அடையாள அட்டை **1.85** இலட்சம் கடல் மீனவர்களுக்கு வழங்கப்படும். பெங்களூரிலுள்ள ‘பாரத் மின்னனு லிமிடெட்,’ இப்பணியினை செயல்படுத்தும் முகமையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. **1.33** லட்சம் மீனவர்களுக்கு புகைப்படம் எடுக்கும் முதற்கட்ட பணி நிறைவு பெற்று, அதற்குரிய அடையாள அட்டைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

**9.2 மீன்பிடி கலன்களை இணைய தளம் மூலம் பதிவு செய்தல்**

மத்திய அரசால் கடலோர பாதுகாப்பினை உறுதிசெய்திடும்பொருட்டு மற்றுமொரு நடவடிக்கையாக மீன்பிடிகலன்களை இணையதளத்தின் மூலம் பதிவு செய்திடுவதற்காக மத்திய அரசின் திட்டத்தின்கீழ்

ரூ.70.509 இலட்சம் தமிழக அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2011–2012–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக, மத்திய அரசால் ரூ.62.85 இலட்சம் கூடுதல் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. விசைப்படகு மற்றும் பாரம்பரிய மீன்பிடி கலன்களின் உரிமையாளர்களின் புகைப்படம் எடுக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. 4,204 மீன்பிடி விசைப்படகுகள் குறித்த அடிப்படை விவரங்கள் பதிவு செய்யும் பணி நிறைவு பெற்றுள்ளது. பாரம்பரிய மீன்பிடி கலன்களை புகைப்படம் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 9.3 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் 63 உபவடிநிலப்பகுதிகளில் செயல்படுத்தப் படுகின்றன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நீரின் பயன்பாடு மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்து விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்துவதாகும். மீன்வளத் திட்டங்களை 53 உபவடிநிலப்பகுதிகளில் செயல்படுத்துவதற்காக உலகவங்கி ரூ.17.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் மீன்வளத்துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

- பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்த்தல்
- பாசன நீர்நிலைகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு
- கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுத்தல்
- புதிய மீன்விதை வங்கிகளை உருவாக்குதல் மற்றும் அரசு மீன்விதைப்பண்ணைகளை சீரமைத்தல்
- அலங்கார மீன்வளர்ப்பு
- கூண்டுகளில் மீன் வளர்த்தல்
- மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்



- மீன் விற்பனைக்காக மீன் அங்காடிகள் அமைத்தல்
- தகவல், கல்வி, மக்கள் தொடர்பு மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்தல்.

2011-12ஆம் ஆண்டில், 5 உபவடிநிலப் பகுதிகளில் ரூ.90.03 இலட்சம் மதிப்பீட்டில் மீன்வளப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் ரூ.33.30 இலட்சம் மதிப்பில் அமராவதி உபவடி நிலப்பகுதியில் மீன்வளர்ப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மீன்வளப்பணிகளை செயல்படுத்த கூடுதல் நிதிக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.7.73 கோடிக்கு தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஒப்புதலைப் பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்தப் பணிகளும் 2012–13 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

### 9.4 தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (2011–12)

2011–12ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட ஏழு திட்டங்கள் ரூ.8.30 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

#### 9.4.1 தமிழக அண்மை கடலோரப் பகுதியில் செயற்கை மீன்உறைவிடங்களை அமைத்தல் (ரூ2.63 கோடி)

தமிழகத்திலுள்ள 17 கடலோர கிராமங்களின் அண்மை கடல் பகுதியில் செயற்கை மீன்உறைவிடங்களை மொத்தம் ரூ.2.63 கோடி செலவினத்தில் அமைப்பதற்காக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணியானது, சென்னை மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கலந்தாய்வு அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

### 9.4.2 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான ஒருங்கிணைந்த மாதிரி வடிவமைப்புகளை உருவாக்குதல் (ரூ.1.35 கோடி)

கடற்பாசி வளர்ப்பு, நண்டு / சிங்கி இறால் வளர்ப்பு, கூண்டுகளில் மீன்வளர்ப்பு போன்ற கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு பணிகள் மீனவ மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதோடு, வருமானத்தை உயர்த்துவதற்கும் மாற்று வாழ்வாதாரத் தொழில்களாகவும் அமைந்துள்ளன. மேலும், அண்மைக் கடல் பகுதியில் மீன் பிடிப்பு நெருக்கடியைக் குறைப்பதற்கும் வழிவகை செய்கிறது. கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் ரூ1.35 கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட, தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து மாதிரி வடிவமைப்புகள் உருவாக்கப்படவுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 9.4.3 மீனவர்களுக்கு தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு தொடர்பான பயிற்சி அளித்தல் (ரூ.85.81 இலட்சம்)

இத்திட்டத்தின் கீழ், ரூ.85.81 இலட்சம் மதிப்பீட்டில் கண்ணாடி நாரிழைப் படகுகளை வாங்கி, மீனவர்களுக்கு ஆழ்கடல் சூரை மீன் பிடிப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சியின் மூலம், சிறிய மீன்பிடி கலன்களைத் தொலை தூர கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பதோடு, குறைந்த செலவில் தங்கு கடல் (Multiday Fishing) மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஒரு புதிய வழியினையும் உருவாக்கும். மீனவர்களுக்கு சூரை மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் நீண்ட தூண்டில் கயிறுகளை இழுப்பதற்கு பயன்படும் ‘ரீல்’களை கையாளும் முறை பற்றிய பயிற்சியும் அளிக்கப்படும்.



### 9.4.4 நீர்த்தேக்கங்கள் மற்றும் கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்புக் குளங்களில், மீன்வளத்தை பாதுகாக்கும் பொருட்டு வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய கண்ணாடி நாரிழைப் படகுகளை வாங்குதல் (ரூ.1.07 கோடி)

நீர்த்தேக்கங்கள் மற்றும் கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்புக் குளங்களில் மீன்வளத்தைப் பாதுகாக்கவும், அதன் மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்கிடவும், இந்த நீர்பரப்புகளில் திருட்டு மீன்பிடிப்பைத் தடுத்திடவும், மீன்பிடிக்கும் வலையின் கண்ணி அளவை ஒழுங்குபடுத்திடவும் மற்றும் மீன் சரணாலயப் பகுதிகளைப் பாதுகாத்திட ரோந்துப்பணி மேற்கொள்வது அத்தியாவசியமான ஒன்றாகும். இந்த ரோந்துப்பணியை வலுப்படுத்திட, மீன்வளத்துறைக்கு ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்ட 45 கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்கப்படவுள்ளன.

### 9.4.5 தனியார் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைத்திட மானிய உதவி (ரூ.50.50 இலட்சம்) அளித்தல்

தனியார் மீன்குஞ்சு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக, ஆண்டொண்டிற்கு 8–10 மில்லியன் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி திறன் கொண்ட பத்து தனியார் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளை அமைப்பதற்கு பண்ணை ஒன்றிற்கு 50 விழுக்காடு மானியம் வழங்க அரசு ரூ.50.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம், ஆண்டொன்றிற்கு 20 முதல் 25 மில்லியன் வளர்ந்த மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்திற்குகான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**9.4.6 கடல் மீனவர்களின் திறனை மேம்படுத்திட மற்ற மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று பயிற்சி அளித்தல் (ரூ.85.85 இலட்சம்)**

இத்திட்டத்தின்கீழ், ரூ.85.85 லட்சம் செலவில் கடல் மீனவர்களின் திறனை மேம்படுத்திட அண்டை மாநிலங்களில் பயன்படுத்தப்படும் மீன்பிடி கலன்களின் வகை, உபகரணங்கள் மற்றும் மீன்பிடி முறை ஆகியவற்றில் பயிற்சி அளித்திடவும், பெரிய மீன்பிடி துறைமுகங்கள், தங்கு தளங்கள், பதப்படுத்தப்படும் கூடங்கள் மற்றும் மீன் அங்காடிகள் ஆகியவற்றை மீனவர்கள் நேரில் கண்டு அவற்றின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள வெளி மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இதன் மூலம் மீனவர்களிடையே கடல் வளத்தை பாதுகாத்திடவும், வளம்குன்றா மீன்பிடி முறைகளை பின்பற்றிடவும் விழிப்புணர்வு ஏற்படும். பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி நடைபெற்று வருகிறது.

**9.4.7 கடலோர மீனவக் கிராமங்களில் சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் (ரூ.1.03 கோடி)**

தமிழகத்தில் 9 கடலோர மாவட்டங்களில், ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் 10 சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் வழிகாட்டி விளக்குகள் அமைக்கப்படும். இந்த வழிகாட்டி விளக்குகள் சூரிய ஒளி மற்றும் காற்று சக்தியினைக் கொண்டு பெறப்படும் தடையற்ற மின்சக்தியின் மூலம் ஒளிருவதால் மீனவர்கள் பாதுகாப்பாக கரை திரும்ப ஏதுவாக அமையும். இதனை நிறுவிடும் ஒப்பந்த நிறுவனம் முடிவு செய்யப்பட்டுள்ளது.



**9.4.8 தேசிய புரத இணை உணவு இயக்கம் (National Mission for Protein Supplement)**

மத்திய அரசு தமிழகத்திற்கு ரூ.3.34 கோடி நிதியை தேசிய புரத இணை உணவு என்ற சிறப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், திருவள்ளூர் மாவட்டம் பூண்டி நீர்த்தேக்கத்தில் அப்பகுதி மீனவர்களைக் கொண்டு வலை கூண்டுகள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்படும்.

இத்திட்டமானது, மீன்வள தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**9.4.9 தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்**

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்திட நிதியுதவி அளித்து வருகிறது.

**அ) நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை**

நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை, நீர்தேக்கங்களில் மேற்கொள்ளப்பட்டு அதன்கீழ், பெருவிரலி மீன்குஞ்சுகள் நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்ய மீன்குஞ்சு ஒன்றிற்கு ரூ.1/– வீதம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதியுதவி அளிக்கிறது. 2011-12–ஆம் ஆண்டு வரை, மீன்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, 15 நீர்த்தேக்கங்களில் 79 இலட்சம் பெருவிரலிகள் இருப்பு செய்ய தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், ரூ.79 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

**ஆ) மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்கள் தரம் உயர்த்துதல்**

2011-12ஆம் நிதியாண்டில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியில், மீன்பிடித்துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களை தரம் உயர்த்த ரூ.12.86 கோடி மொத்த மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணை 4இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4: மீன்பிடித்துறைமுகம் தரம் உயர்த்தும் பணிகளுக்கான ஒப்பளிப்பு**

| | | |
|---|---|---|
| 1) | சென்னை மீன்பிடித்துறைமுகம் தரம் உயர்த்துதல் | ரூ.12.07 கோடி |
| 2) | புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன் இறங்கு தளம் தரம் உயர்த்துதல் | ரூ.53.26 இலட்சம் |
| 3) | கடலூர் மாவட்டம் முடசலோடை மீன்இறங்குதளம் தரம் உயர்த்துதல் | ரூ.25.32 இலட்சம் |

கட்டுமானப்பணிகள் மேற்காணும் இடங்களில் நடைபெற்று வருகின்றன.

## 10. மீனவர் கூட்டுறவு சங்கங்கள்

மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கை தரத்தினை உயர்த்திட கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்துறையில் மீனவர் / மீனவ மகளிருக்கு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் சென்றடைய மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இன்றியமையாதவை. **1,393** தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களில் **6.19** இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 54 நியாய விலைக் கடைகள் மீனவர் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்பட்டு



வருகின்றன. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5: மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| கூட்டுறவு சங்கங்கள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 566 | 3,34,210 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 442 | 1,99,671 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 295 | 72,030 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 68 | 6,786 |
| இதர வகை சங்கங்கள் | 22 | 6,400 |
| **மொத்தம்** | **1393** | **6,19,097** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 11 | 727 |
| தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 598 |

## 11. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்

மீனவர்களின் நலன் மற்றும் அவர்களது சமூக பாதுகாப்பை கருத்தில் கொண்டு மீன்பிடித் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர்களின் நலனுக்காக, தமிழ்நாடு மீனவர் நல வாரியம் துவக்கப்பட்டு, சென்னை நீலாங்கரையைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கி வருகிறது. **2011–12–**ஆம் ஆண்டில், பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த அரசு ரூ.**5** கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை 6 : மீனவர் நல வாரியத் திட்ட விவரங்கள்</u>

| வ. எண் | நிவாரணம் / உதவி |
|---|---|
| 1 | **விபத்து நிவாரணம்** |
| | (அ) விபத்தில் மரணம் |
| | (ஆ) இரண்டு கைகள் இழப்பு |
| | (இ) இரண்டு கால்கள் இழப்பு |
| | (ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு |
| | (உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு |
| | (ஊ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையானகாயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு |
| 2 | **மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது மீன்பிடிப்பிற்குப் பின் இறத்தல் (விபத்தின் காரணமாக அல்லாமல்)** |
| 3 | **மீன்பிடிக்கையில் காணமற்போன மீனவர்** |
| 4 | **இயற்கை மரணம்** |
| 5 | **ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை** |
| 6 | **உறுப்பினரின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை** |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி |
| | இ) தொழிற் கல்வி (ITI) மற்றும் பல் தொழில் நுட்ப பயிற்சி(Polytechnic) |
| | ஈ) இளங்கலை பட்டப்படிப்பு |
| | ஊ) முதுகலை பட்டப்படிப்பு |
| | எ) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் – இளங்கலை |
| | ஏ) முதுகலை தொழிற் கல்விகள் |
| 7 | **திருமண உதவி** |
| | அ) உறுப்பினர் திருமண உதவி |
| | ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் |
| 8 | **மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித்தொகை (மகளிர் உறுப்பினர்களுக்கு மட்டும்)** |
| | மகப்பேறு |
| | கருச்சிதைவு / கருக்கலைப்பு |
| 9 | **முதியோர் ஓய்வூதியம் (65 வயதிற்கு மேல்)** |



31.03.2012 முடிய, **4.12** இலட்சம் மீன்பிடித் தொழிலாளர்கள் வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். இதுவரை, 14,823 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, பல்வேறு நலத்திட்டங்களுக்காக, வாரியத்தால் ரூ.7.94 கோடி வழங்கப்பட்டுள்ளது. நல வாரியச்சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பல்வேறு முகமைகள் மூலம் பங்குத் தொகையாக ரூ.**3.79** கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

## 12. பகுதி –2 திட்டங்கள்

### அ) 2011-12

2011-12ஆம் ஆண்டில், பகுதி–2 திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்திட ரூ.**1.05** கோடி அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் நெமிலிகுப்பம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் முதலியார் குப்பம் ஆகிய மீனவ கிராமங்களின் கடற்பகுதியில் இரண்டு செய்றகை மீன் உறைவிடங்கள் அமைத்திட ரூ.**30** இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீன்வளத்துறையின் பல அலுவலகங்களில் இருந்த பழைய ஊர்திகளுக்குப்பதிலாக புதிய ஊர்திகள் ரூ.**53.20** இலட்சம் செலவில் வழங்கப்பபட்டுள்ளன. நீலகிரி மாவட்டம் உதகையிலுள்ள அவலாஞ்சியில் பணியாளர் குடியிருப்புகள் ரூ.**10** இலட்சம் செலவில் புதுப்பிக்கும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் பயன்பாட்டிற்கு ரூ.**6** இலட்சம் செலவில்“இன்வெர்டர்கள்” (Invertor) மற்றும்

மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மீன்வள பகுதிகளில் தகவல் தொடரமைப்பை வலுப்படுத்திட, உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு, பன்முக வசதிகளைக் கொண்ட நிகரி மற்றும் நகலெடுக்கும் கருவிகள் ரூ.6.30 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

### ஆ) 2012-13

2012–13 ஆம் ஆண்டில் பகுதி – II திட்டத்தில் ரூ.97.80 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

<u>அட்டவணை 7– பகுதி 2 திட்டங்கள் (2012–13)</u>

| வ. எண். | திட்டங்கள் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மீன்வளத்துறை அலுவலகங்களிலுள்ள பழைய ஊர்திகளுக்கு பதிலாக புதிய ஊர்திகள் வழங்குதல் | 61.00 |
| 2 | மீன்துறை இயக்குநர் அலுவலகத்திலுள்ள மாநாட்டு கூடத்தின் கட்டமைப்பினை மேம்படுத்துதல் | 15.25 |
| 3 | மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு கணினி மற்றும் அச்சு இயந்திரம் மற்றும் தொலைபேசி வழங்குதல் | 1.96 |
| 4 | மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு ஒளிநகல் இயந்திரங்கள் வழங்குதல் | 13.23 |
| 5 | திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறிலுள்ள பணியாளர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல். | 6.36 |
| | **மொத்தம்** | **97.80** |



### 13. 2012–13 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு

2012–13 ஆம் ஆண்டுக்கு ரூ.417.2235 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. அதில் ரூ.269.4050 கோடி வருவாய் செலவினம் இருக்கும் என்றும், ரூ.147.8185 கோடி மூலதனமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 14. தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது)

மீனவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்திட தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) 1983 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கூட்டுறவு சட்ட விதிகளின்படி பதிவு செய்யப்பட்டு, 06.11.1991 முதல் இயங்கிவருகிறது. தற்போது 589 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்களும், 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் உறுப்பினர்களாக இணைந்துள்ளார்கள்.

வருவாய் ஈட்டும் வகையில், வரிவிலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை மீனவர்களுக்காக கீழ்க்காணும் இடங்களில் இணையம் நடத்தி வருகிறது.

<u>அட்டவணை 8– எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்</u>

| வ. எண் | மாவட்டம் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | பழவேற்காடு |
| 2 | காஞ்சிபுரம் | நீலாங்கரை |
| 3 | கடலூர் | அன்னன்கோயில் |
| 4 | நாகப்பட்டினம் | நாகூர் |
| 5 | தஞ்சாவூர் | சேதுபாவாசத்திரம் |
| 6 | தூத்துக்குடி | வேம்பார் |
| | | தருவைக்குளம் |

| | | |
|---|---|---|
| 7 | கன்னியாகுமரி | சின்னமுட்டம் |
| 8 | இராமநாதபுரம் | கீழக்கரை<br>மண்டபம்<br>இராமேஸ்வரம் |

மேலும், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்திலும், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்திலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் செருதூரிலும் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது.

### 14.1 மானிய விலையில் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட தொழிற்சாலை மண்ணெண்ணெய் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிற்சாலை மண்ணெண்ணெய் இணையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

### 14.2 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்களை விற்பனை செய்தல்

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால், கடல் மீனவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் அளிக்கும் மானிய விலையில் உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.30,000/– அல்லது இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு, இதில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. 2011-12-ஆம் ஆண்டில் 1,886 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.



### 14.3 இதர சேவைகள்

கடல் மீனவர்களுக்குத் தேவையான இயந்திர உதிரி பாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இஞ்சின் ஆயில் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சேதுபாவாசத்திரத்தில் சேவை மையம் ஒன்றும் மற்றும் நெய்வேலி அனல் மின் நிலைய வளாகத்தில் நவீன மீன் விற்பனை நிலையம் ஒன்றினையும் நடத்தி வருகிறது.

## 15. தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது)

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974–ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5. கோடியாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.45 கோடியாகும்.

- தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக குழும இயக்குநர்கள் தமிழக அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.
- தற்போது பல்வேறு பதவிகளில் 159 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.
- தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் கீழ்க்காணும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
  - நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை
  - மீன் குஞ்சு உற்பத்தி
  - மீன் விற்பனை மற்றும் கடல் உணவகம்
  - வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை
  - இறால் குஞ்சு பொறிப்பகம் மற்றும் இறால் பண்ணைகள்

- o டீசல் / மண்ணெண்ணெய் மற்றும் வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரம் விற்பனை

### 15.1 நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை

தமிழ□ நாடு மீன□ வளர்ச்சிக் கழக பராமரிப்பில□ உள□ள 8 நீர்த்தேக்கங்□களில□ அறிவியல் ரீதியாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகிறது. உள்நாட்டு மீனவர் சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்டு மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து 2011–12 ஆம் ஆண்டில், 676 டன்கள் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.4.16 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில், 991 டன்கள் மீன்பிடிப்பு மேற்கொள்ளவும் ரூ.5.19.கோடி வருவாய் ஈட்டிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 15.2 மீன் குஞ்சு உற்பத்தி

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் சுமார் 3.79 ஹெறக்டர் மீன் குஞ்சு வளர்ப்பிடம் உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன் மீன்வளத்துறைக்கும் தனியார் மீன் வளர்ப்போருக்கும் வழங்கப்படுகின்றன.

2011–12–ஆம் ஆண்டில், 21.7 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.43.61 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில், மீன் குஞ்சுகள் இலக்கு 27 மில்லியன்களாக நிர்ணயிக்கப்பட்டு ரூ.54.43 இலட்சம் வருவாய் ஈட்டிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### 15.3 மீன் பதனீட்டு நிலையங்கள்

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபத்தில் உள்ள மீன்பதப்படுத்தும் நிலையம் 2011–12ஆம் ஆண்டில், ரூ.9.39 இலட்சத்திற்கு தனியார் கடல் மீன் ஏற்றுமதியாளருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும், 2012–13 ஆம் ஆண்டில் 10 விழுக்காட்டினை உயர்த்தி ரூ.10.32 இலட்சமாக குத்தகைத் தொகை இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### 15.4 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம், கடலோரப் பகுதியில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் 30 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் நிறுவி, இயந்திரமாக்கப்பட்ட நாட்டுப் படகு மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு மானியத்துடன் கூடிய எரியெண்ணெய் வழங்கி வருகிறது. 2011–12 ஆம் ஆண்டில், 87,672 கிலோ லிட்டர் எரியெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.353.47கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில், 92,758 கிலோ லிட்டர் எரியெண்ணெய் விற்பனை செய்யவும் ரூ.387.88 கோடி வருவாய் ஈட்டிடவும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 15.5 மீன் விற்பனை

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, திருச்சி மற்றும் திருவண்ணாமலை போன்ற நகரங்களில் சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் விற்பனை செய்து

வருகிறது. 2011–12 ஆம் ஆண்டில், 908 டன்கள் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ.12.86 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சென்னை, கோவை மற்றும் திருப்பூரில் நவீன மீன் உணவகத்தை நடத்தி வருகிறது. 2012–13 ஆம் ஆண்டில், 1,070 டன்கள் மீன்கள் விற்பனை செய்யவும் ரூ.13.78 கோடி வருவாய் ஈட்டிடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 15.6 இறால் குஞ்சு பொறிப்பகம், நீலாங்கரை

நீலாங்கரையிலுள்ள இறால் குஞ்சு பொறிப்பக வசதிகள், கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள "இராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்திற்கு" நீர்வாழ் உயிரினங்களின் குஞ்சு உற்பத்தி செய்திடும் பொருட்டு சினை இறால்களை பராமரித்தல் மற்றும் இறக்குமதி செய்யப்படும் சினை இறால்களைத் தனிமைப்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்கு ஆய்வுக்குட்படுத்தி நோய் தொற்று இல்லை என்று உறுதி செய்யும் இடமாகக் பயன்படுத்திட 24.1.2004 முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 2011–12 ஆம் ஆண்டில், ரூ.3.85 இலட்சம் ஆண்டொன்றுக்கு குத்தகை வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2012–13 ஆம் ஆண்டில், ரூ.4.65 இலட்சம் குத்தகையாக "இராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்திடமிருந்து" பெறப்படும்.

### 15.7 மாதிரி இறால் வளர்ப்பு பண்ணை, காரங்காடு

2011–12 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரங்காடு மாதிரி இறால் பண்ணை ஆண்டொன்றிற்கு ரூ.5.57 இலட்சத்திற்கு, தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டு இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 2012–13 ஆம் ஆண்டில், ரூ.6.13 இலட்சம் குத்தகையாகப் பெறப்படும்.



### 15.8 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆழியார் மற்றும் திருமூர்த்தி நகர் ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும் ஆழியார் மற்றும் திருமூர்த்தி நகரில் வண்ண மீன் விற்பனையுடன் கூடிய வண்ண மீன் காட்சியகங்களை நிறுவி பராமரித்து வருகிறது. சென்னை மாநகரில் வண்ண மீன் விற்பனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்ட வகையில் 2011–12 ஆம் ஆண்டில், ரூ.21.99 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில், ரூ.29.45 இலட்சம் வருமானம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 15.9 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திர மயமாக்கும் திட்டம்

நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2011–12 ஆம் ஆண்டில், 249 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகம் செய்யப்பட்டு ரூ.7.65 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில், 270 வெளிபொருத்தும் இயந்திரங்கள் விநியோகம் செய்திடவும் ரூ.8 இலட்சம் வருவாய் ஈட்டிடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 15.10 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெய் வழங்குதல்

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு, மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2011–12 ஆம் ஆண்டில், 4,970 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு ரூ.24.41 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2012–13 ஆம் ஆண்டிற்கு 6,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணை விநியோகம் செய்யவும் ரூ.31.70 கோடி வருவாய் ஈட்டிடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 15.11 இதர திட்டங்கள்

மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் மூலம் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### 15.11.1 கோவை மாவட்டம் உக்கடத்தில் உள்ள மொத்த மீன் விற்பனைச் சந்தையை நவீனமயமாக்குதல்

கோயம்புத்தூர் உக்கடத்தில் உள்ள மொத்த மீன் விற்பனைச் சந்தையை ஐதராபாத்தில் உள்ள மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.2.25 கோடியில் நவீனப்படுத்தி தரம் உயர்த்த திட்டமிடப்பட்டு, இப்பணிகள் கோயம்புத்தூர் மாநகராட்சி மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது.

### 15.11.2 சென்னை சாந்தோம் CIBA வளாகத்தில் பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்காப்பு அறையுடன் கூடிய மீன்களைக் கையாளும் மையம் அமைத்தல்

சென்னையில் உள்ள தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனை நிலையங்களை தரம் உயர்த்தும் நோக்கில், சென்னை சாந்தோம் பகுதியில் தேசீய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ.45 இலட்சம்



செலவில் பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிரூட்டப்பட்ட சேமிப்பு அறை வசதிகளுடன் மீன்களைக் கையாளும் இடம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம், சென்னை மாநகரிலுள்ள விற்பனை அங்காடிகளுக்கும், நுகர்வோர்களுக்கும் தரமான மீன்கள் கிடைக்கும்.

### 15.11.3 நாகப்பட்டினம் துறைமுகத்தில் மதிப்பூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரிக்கும் மையம் (FISH DRESSING CENTRE) நிறுவுதல்

மீனவ மகளிருக்கு தரமான மீன் உணவு பொருட்கள் தயாரித்தல் மற்றும் மீன்களை கையாளுதல் தொடர்பான பயிற்சி அளிக்கும் நோக்கில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ.1 கோடி செலவில் ஒரு மீன் உணவு பொருட்கள் தயாரிக்கும் மற்றும் மீன் கையாளும் மையம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

### 15.11. 4 தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்திலுள்ள பனிக்கட்டி நிலையத்தின் தரம் உயர்த்துதல்

மீன்பிடித் துறைமுகங்களை தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் கடல் பொருள் ஏற்றுமதி ஆணையம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன், ஒரு பனிக்கட்டி நிலையம் மற்றும் ஒரு குளிரூட்டப்பட்ட சேமிப்பு அறை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றிற்குத் தேவைப்படும் இயந்திரங்கள் கடல் பொருள் ஏற்றுமதி ஆணையத்தால் வழங்கப்படவுள்ளது. கட்டுமான பணிகள், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.12 இலட்சத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**நிதி நிலை**

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம், பல்வேறு மீனவர் நல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவை தவிர பல்வேறு வணிக ரீதியான திட்டங்களான மீன் விற்பனை, கடல் மீன் உணவு மையங்கள், எரியெண்ணெய் / மண்ணெண்ணெய் விநியோகம் மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை ஆகியவற்றையும் செயல்படுத்தி வருகிறது. 2011–12 ஆம் ஆண்டில், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ.5 கோடி (தணிக்கை செய்யப்படாதது) நிகர இலாபம் ஈட்டியுள்ளது. மேலும், 2012–13 ஆம் ஆண்டில், ரூ.6.25 கோடி இலாபம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 16. முடிவுரை

மீன்பிடித் தொழிலானது, உலகில் உள்ள பழமையான மற்றும் இன்னல் நிறைந்த தொழில்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதார உரிமையை நிலைநாட்டுவதிலும், மீனவர் நலனிலும் இந்த அரசு உயர் முன்னுரிமையை எப்பொழுதும் அளித்து வருகிறது. தமிழ்நாட்டிற்கு 'கச்சத்தீவினை' மீட்பதில் இந்த அரசு முனைப்பான நடவடிக்கைளை ஏற்கனவே எடுத்துள்ளது. இலங்கை கடற்படையினர் மற்றும் போக்கிரிகளால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாவதை முற்றிலும் தடுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் மற்றும் உயர் தூதரக குழுவினரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு சென்று உறுதியாக நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் நலனை எப்பொழுதுமே தன் இதயத்தில் இருத்தி செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்த உண்மையாகும். 2011–12ஆம் ஆண்டில், மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் கடல் மீனவர்கள்/மீனவ மகளிருக்கு மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தில் வழங்கப்பட்டு வரும் நிவாரணத்



தொகையுடன், கூடுதலாக ஒவ்வொரு கடல் மீனவ குடும்பத்திற்கும் நாட்டிலேயே முதல் முறையாக சிறப்பு உதவித் தொகையாக ரூ.4,000/– வழங்கும் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் மூலம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீனவர் நலனில் அதிக அளவு அக்கறையும், ஈடுபாடும் கொண்டுள்ளார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை இத்தருணத்தில் நிரூபித்துள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். மேலும், 2011–12ம் ஆண்டில், மீன்பிடி தடை காலத்தில் மீனவர்களின் துயரினை நீக்கிட மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியினை ரூ.1,000/–த்திலிருந்து ரூ.2,000/–மாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தியுள்ளார்கள், இத்திட்டம், ,வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

உள்நாட்டு மீன்வளத்தில், மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் தேவையில் உள்ள இடைவெளியினை குறைத்திடும் வகையாக தற்போது மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மீண்டும் புதுப்பிக்கவும், மேட்டூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள திருக்காம்புலியூரில் புதிய மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் அமைத்திடவும் மற்றும் தனியாரினை மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் அமைக்க ஊக்குவிக்கவும், இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் பெறப்பட்டுவரும் நிதியுதவி மூலம், மீன்வளர்ப்பிற்கு உகந்த அனைத்து உள்நாட்டு நீர்நிலைகளிலும் மீன்வளர்ப்புப் பணிகள் மேம்படுத்தப்படும். இத்திட்டங்கள் மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், மக்களுக்குத் தேவையான புரத தேவையினை பூர்த்தி செய்திடவும் இயலும். மேலும், புதுமையான முறையில் சுகாதாரமான மீன் விற்பனையை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நடமாடும் மீன்விற்பனை ஊர்திகள் மூலம் புரதம் நிறைந்த மீன்,

நுகர்வோர்களின் இருப்பிடங்களுக்கு அருகே விற்பனை செய்யப்படும்.

தற்போது கட்டப்பட்டுவரும் உலகத்தரத்திற்கு இணையான மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள், போதிய படகுகள் நிறுத்தும் வசதிகளையும், மீன்களை கரை சேர்க்க தேவையான வசதிகளையும், சுகாதாரமான மீன் உணவு பொருட்களை அளித்திடவும் வகை செய்யும். இதனால், பிடிக்கப்படும் மீன்களுக்கு ஏற்றுமதி சந்தைகளில் நல்ல விலையினைப் பெறுவதோடு, உள்நாட்டு சந்தைகளிலும் நல்ல விலையினைப் பெற்றிடவும் வழிவகை செய்யும். மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்தல், தாய்க்கப்பல் கோட்பாட்டின் கீழ் மீன்பிடிப்பு மேற்கொள்வதை அறிமுகப்படுத்துதல், மாற்று வகை மீன்பிடிப்பு முறையில் சூரைமீன் பிடித்தல் ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில், இதுகாறும் உகந்த அளவில் பயன்படுத்தப்படாமலிருக்கும் ஆழ்கடல் மீன்வளத்தினை மீனவர்கள் பயன்படுத்தி, அதிக மீன் உற்பத்தியை அடைந்திட இயலும்.

**கே.ஏ.ஜெயபால்**
**மீன்வளத்துறை அமைச்சர்**